உணவுப் பொருட்களான அரிசி, பருப்பு மற்றும் எண்ணெய் போன்றவை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் நாள் ஒன்றுக்கு பயனாளிக்கு 23 பைசா வீதம் வழங்கப்பட்டு வந்த உணவுச் செலவினத்தை இப்போது மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 35 பைசாவாக உயர்த்தியிருக்கின்றார். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.20.98 கோடி ஆகும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில், மேற்கண்ட விகிதத்தில் சத்துணவு அளிக்கப்படுவதால், ஒரு நாளைக்கு 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு 358.2 கலோரி சக்தியும், 8.62 கிராம் புரதச் சத்தும் கிடைக்கிறது. 5 முதல் 9 வயது வரை உள்ள மாணவர்களுக்கு 435 கலோரி சக்தியும், 10.6 கிராம் புரதச் சத்தும் கிடைக்கிறது. 10 வயது முதல் 15 வயது வரை உள்ள மாணவர்களுக்கு 504 கலோரி சக்தியும், 11 கிராம் புரதச் சத்தும் கிடைக்கின்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சத்துணவு சாப்பிடக்கூடிய குழந்தைகளுக்கு மேலும் புரதச் சத்து மிகுந்ததாக, ஒரு பயனாளிக்கு வாரத்தில் திங்கட்கிழமை அன்று 20 கிராம் உருளைக்கிழங்கும், செவ்வாய்க்கிழமை அன்று 20 கிராம் முழு கொண்டைக் கடலை அல்லது 20 கிராம் முழு பச்சைப் பயறும், வியாழக்கிழமை வேகவைத்த ஒரு முட்டை ஆகியவற்றையும் சமைத்து சத்துணவுடன் சேர்த்து அம்மா அவர்களுடைய ஆட்சியில் வழங்கப்பட்டு வருகின்றது என்பதையும், இதனால் ஒரு பயனாளிக்கு சத்துணவுடன் 8.54 கிராம் புரதச் சத்தும், 158.2 கலோரி சக்தியும் கூடுதலாக ஒவ்வொரு வாரமும் கிடைக்கின்றது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 10, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

10—

கட்டட வசதி

•31237—திரு. பி. கே. சேகர்பாபு:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 பிப்ரவரி 2

(அ) தண்டையார்பேட்டை புறநகர் மருத்துவமனையில் இயங்கிவரும் சித்த மருத்துவப் பிரிவிற்குத் தனியாகக் கட்டடம் கட்ட சிறப்பு நிதி ஒதுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தண்டையார்பேட்டை புறநகர் மருத்துவமனையில் இயங்கிவரும் சித்தா மருத்துவப் பிரிவிற்குத் தனியாகக் கட்டடம் கட்ட சிறப்பு நிதி ஒதுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. (ஆ) இக்கேள்வி எழவில்லை.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிவுற்றிருந்த இந்தத் தண்டையார்பேட்டை புறநகர் மருத்துவமனைக்குப் புத்துயிர் கொடுக்கின்ற வகையிலே கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் ரூபாய் 60 இலட்சத்தை ஒதுக்கீடு செய்து பல்வேறு வளர்ச்சிகளை அடைந்திருக்கிற இந்த சித்தா மருத்துவமனையில் சராசரி ஒரு நாளைக்கு 150-க்கும் மேற்பட்ட புறநோயாளிகள் சிகிச்சை பெற்றுச் செல்கிறார்கள். இப்படிப் போதிய மருத்துவ வசதி தேவைப்படுகின்ற நோயாளிகளுக்கு, உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கக்கூடிய அளவிலே ஒரு சிறப்புக் கட்டடத்தைக் கட்டித்தர மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி, தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களால் தமிழகத்தினுடைய சித்தா பிரிவுகளுக்குத் தனியாகக் கட்டடம் கட்டுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு, 2002-2003 ஆம் நிதி ஆண்டிலே சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் சித்தா மருத்துவப் பிரிவிற்கு எனத் தனியாகக் கட்டடம் கட்டுவதற்கு, கட்டடம் ஒன்றிற்கு ரூ.2 இலட்சம் வீதம் ரூ.1.04 கோடி பெறப்பட்டு, கட்டடம் கட்டப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2005 பிப்ரவரி 2]

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் சென்னையானது மருத்துவப் பணிகளின் தலைநகரமாக உருவெடுத்து வருகின்ற இந்த நேரத்தில், அம்மா அவர்களின் புகழ்க் கிரீடத்தில் ஒரு வைரக் கல்லாக ரூ. 104.47 கோடி செலவிலே 1650 படுக்கைகள் கொண்ட மாபெரும் இரண்டு கோபுரக் கட்டடங்கள் விரைவில் திறக்கப்படுவதாக கவர்னர் உரையிலே அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அப்படிப் புதிதாகத் திறக்கப்படுகின்ற இந்த மருத்துவமனையிலே சித்தாவுக்கு என்று தனியாகப் பிரிவு ஏற்படுத்தித் தரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தண்டையார்பேட்டையிலே சித்தா பிரிவு இயங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களை எங்களுடைய அலுவலர் நேரடியாகத் தொடர்புகொண்டு கடந்த நிதி ஆண்டிலே நிதி ஒதுக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்தார்கள். தாங்கள், 2004-2005 ஆம் ஆண்டிலே ரூ. 4 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து தருவதாகவும், சட்டமன்ற உறுப்பினரவர்களால் அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனைக் கண்காணிப்பாளரிடம் உறுதியளிக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைக்கு புறநகர் மருத்துவமனை என்று ஒன்று வைத்து அரசு சில இடங்களிலே மிகச் சிறப்பாக நடத்தி வந்து கொண்டிருக்கிறது. நம்முடைய வேலூரில் அரசு.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தண்டையார்பேட்டைக்கும், வேலூருக்கும் நீண்ட தூரம்.

வினா எண் 11, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.